மலர் : 9 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 8
தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

**ஜுன் 2009**

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रेड विलेज मिनिस्ट्री ഹണ്ട്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

ஆண்டு சந்தா இந்தியா ரூ.25 வெளிநாடு ரூ.250

# 100- கிராம ஊழியம்

**TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை**




**TVGM - 2009 ஜுன்**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

**கர்த்தருடைய**
**வாய் சொல்லும்**
**புது நாமத்தால்**
**நீ அழைக்கப்படுவாய்**
ஏசாயா 62:2.

கர்த்தருடைய கிருபையினால் 02.05.09-ல் தோப்புக்கொல்லை இலங்கை அகதிகள் முகாமில் சபை போதகர் **ஜான் பால்** அவர்களுக்கு கட்டிக் கொடுத்த வீட்டை *Pr. Viki & Bro.Warren* தேவனுடைய மகிமைக்கென்று பிரதிஷ்டை செய்தார்கள்.



**Thanks:**
Emmanuel Christian Fellowship
*Newbury park.* Pr.Paul / Sis.Rachel and Congregation Members.

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

## TAMIL VILLAGE GOSPEL MISSION

**TVGM MANAGING TRUSTEE Letter Dated: 11.05. 2009**



கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளுக்கு,

**தேவசமாதானம் உண்டாவதாக!**

TVGM –ன் 30வது ஆண்டு நிறைவு விழாவை சிறப்பாக நடத்தி தந்த தேவனைத் துதியுங்கள்.

மேலும் TVGM –ஐ பொறுப்பெற்று 5 ஆண்டுகளை முடித்து, 6வது ஆண்டை துவங்க கர்த்தர் கிருபை செய்தார். தேவனைத் துதியுங்கள்.

ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் கலந்து, ஜெபித்து தேவ வார்த்தைகளைக் கொடுத்த **பாஸ்டர் விக்கி** அவர்களுக்கும், **சகோ.வாரன்** அவர்களுக்கும் எங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஏலீம் கிறிஸ்தவ மையத்தின் தலைமைப் போதகர் **பாஸ்டர் லூக்** அவர்களுக்கு விசேஷமாக நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் ஏப்ரல் மாதத்தில் 8 கிராமங்களில் கட்டப்பட்டு வரும் ஜெபவீடுகளை நேரடியாக பார்த்து, ஜெபித்து வர கர்த்தர் கிருபை செய்தார்.

குறிப்பாக **விராச்சிலை** கிராமத்தில் பல ஆண்டுகளுக்கு முன்னதாக கட்டப்பட்டும், இன்று வரை பூச்சு வேலையை முடிக்க விடாமல், ஆராதனை நடத்த விடாமல் தடுத்து வரும் எதிர் சக்திகளை கர்த்தர் முறியடிக்கும்படியாக ஜெபியுங்கள். அத்துடன் புதுக்கோட்டை மாவட்டத்தில் கறம்பக்குடி A.G, JMHA ஆகிய இரு சபைகளிலும் கட்டத் துவங்கிய ஜெபவீடுகளின் பெயரில் பொய் குற்றச்சாட்டு, புகார்கள் போலீஸ் ஸ்டேஷனில் கொடுக்கப்பட்டு கட்டுமானப் பணி தடை செய்யப்பட்டுள்ளது. கர்த்தர் தாமே தடைகளை உடைத்தெரிந்து, ஜெபவீடு கட்டப்பட ஜெபியுங்கள்.

சிறுவர் இல்ல கட்டிடம் திருச்சியிலும், கோடாவிளையிலும் கட்டுவதற்கு மிகத் தேவையாக உள்ளது. புதுக்கோட்டையிலும் சிறுவர் இல்லத்திற்கு நிலம் வாங்க தேவை உள்ளது. ஜெபியுங்கள்.

ஒரிஸாவில் **கந்தமால்** மாவட்டத்தில் துன்புறுத்தப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு உதவி செய்யவும், குறைந்த பட்சம் 5 ஜெபவீடுகளாவது இந்த ஆண்டில் கட்டவும் வாஞ்சித்து ஜெபித்து வருகிறோம்.

நானும், என் தகப்பனாரும் **இலங்கைக்கு** சென்று எப்படிப்பட்ட உதவிகளை செய்யலாம் என கவனித்து வர விரும்புகிறோம். ஜெபியுங்கள்.

**கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!**

**ஸ்டீபன் கிறிஸ்டோபர்.**

# கர்த்தருடைய வாய் சொல்லும் புது நாமத்தால் நீ அழைக்கப்படுவாய். ஏசாயா 62:2

**தே**வனுடைய வாக்குத்தத்தத்திற்காக ஆவலோடு காத்துக் கொண்டிருக்கும் அன்பு தேவஊழியரே, விசுவாசிகளே!

**ஏசாயா 62:2**

**கர்த்தருடைய வாய் சொல்லும்**
**புது நாமத்தால்**
**நீ அழைக்கப்படுவாய்.**

ஒரு வேளை இன்று உங்கள் ஞானக் குறைவினாலோ அல்லது உடல் வளர்ச்சி குறைவினாலோ அல்லது நிறத்தினாலோ அல்லது உடல் உருவத்தைக் கொண்டோ அல்லது ஒரு குறையை உங்களில் கண்டு, உங்களை அற்பமாய் எண்ணி, கேலிப் பேச்சாக உங்களுக்கு ஒரு '**பட்டப் பெயர்**' சூட்டி, உங்களை அவமானப் படுத்தலாம்.

சில வேளைகளில் உங்கள் பிள்ளைகளையோ அல்லது உடன் பிறப்புகளையோ, பெற்றோரையோ அவமானப்படுத்தலாம்.

கண் கலங்காதீர்கள். உங்கள் வேதனையை தேவன் அறிவார். ஒவ்வொரு முறையும் சாடையாக உங்களைப் பட்டப் பெயர் சூட்டி அழைக்கும்போது, அல்லது கண் சாடை காட்டும்போது, உங்கள் உள்ளம் சுக்கு நூறாக உடையலாம்.

ஆனாலும் உங்களைத் தேற்று வதற்காகவே தேவனுடைய வார்த்தை இந்த மாதத்தில் உங்களுக்கு கடந்து வருகிறது.

**கர்த்தருடைய வாய் சொல்லும்**
**புது நாமத்தால்**
**நீ அழைக்கப்படுவாய்.**

உங்கள் விசுவாசத்தை பின்வருமாறு அறிக்கை செய்யுங்கள்.

**கர்த்தருடைய வாய் சொல்லும்**
**புதுநாமத்தால்**
**நான் அழைக்கப்படுவேன்.**

உலக மனிதனின் வாய் ஆயிரம் வார்த்தைகளைச் சொல்லி உன்னை வேதனைப்படுத்தினாலும், கர்த்தரின் வாய் சொல்லும் ஒரே வாக்குத்தத்தம் உனக்குப் போதும்.

**புது நாமத்தால் நீ அழைக்கப்படுவாய்.**

பழைய ஏற்பாட்டின் காலத்திலே,

**ஆபிராம்** என்பவர் **ஆபிரகாம்** என்ற புது நாமத்தால் அழைக்கப்பட்டார்.

**சாராய்** என்பவர் **சாராள்** என்ற புது நாமத்தால் அழைக்கப்பட்டாள்.

**யாக்கோபு** என்பவர் **இஸ்ரவேல்** என்ற புது நாமத்தால் அழைக்கப்பட்டார்.

புதிய ஏற்பாட்டின் காலத்திலே,

**சீமோன்** என்பவர் **பேதுரு** என்ற புது நாமத்தால் அழைக்கப்பட்டார்.

**சவுல்** என்பவர் **பவுல்** என்ற புது நாமத்தால் அழைக்கப்பட்டார்.

ஆம்! இவர்களையெல்லாம் புதுநாமத்தால் அழைத்த தேவன் உங்களைப் பார்த்து கூறுகிறார்:

**நீ புது நாமத்தால் அழைக்கப்படுவாய்.**

தேவன் உனக்கு ஒரு புதிய பட்டத்தை வழங்க சித்தமுள்ளவராயிருக்கிறார்.

இது மனிதன் கொடுக்கும் பட்டமல்ல, உலகம் கொடுக்கும் பாராட்டுமல்ல, தேவனே உனக்கு பட்டம் கொடுக்கிறார். கர்த்தருடைய ஊழியத்தின் பாதையில் உனக்கு உயர்வு காத்திருக்கிறது. கர்த்தருடைய ராஜ்யத்தைக் கட்டி எழுப்ப உனக்கு ஒரு உதவி காத்திருக்கிறது.

**கர்த்தருடைய வாய் சொல்லும்**
**புது நாமத்தால்**
**நீ அழைக்கப்படுவாய்.**

**வெளி.2:17** ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக் கொடுத்து, அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும், அந்த கல்லின்மேன் எழுதப்பட்டதும் அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய **புதிய நாமத்தையும் கொடுப்பேன்** என்றெழுது.

ஆம்! அதைப் பெறுகிற உன்னையன்றி வேறொருவனும் அறியக்கூடாதது மாகிய, **புதிய நாமத்தை** உனக்கு கொடுக்கப் போகிறார். ஆமென்.

**வெளி.3:12** ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன், அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை; என் தேவனுடைய நாமத்தையும் என் தேவனால் பரலோகத்திலிருந்திறங்கி வருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், **என் புதிய நாமத்தையும் அவன்மேல் எழுதுவேன்.**

**வெளி.2:17** ல் புதிய நாமத்தை கொடுப்பேன் என்றும், **வெளி.3:12**ல் புதிய நாமத்தை அவன்மேல் எழுதுவேன் என்றும் கடைசி காலத்தில் நடக்கப் போகிற காரியங்களை தேவன் வெளிப்படுத்துவதைப் பார்க்கிறோம்.

'புதிய நாமம்' கிடைப்பதற்கு அடிப்படை காரியம் ஜெயங்கொள்வதாக உள்ளது.

பாவ வாழ்க்கையிலிருந்து, ஒரு ஜெயமுள்ள வாழ்க்கை தேவை. உலகம், மாமிசம், பிசாசிலிருந்து ஒரு ஜெயமுள்ள வாழ்க்கை தேவை. சகலவற்றிற்கும் ஜெயம் கொள்ளும் வாழ்க்கை தேவை.

**வெளி.21:7** ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்.

**1 யோவான் 5:5** இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்?

என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே!

**கர்த்தருடைய வாய் சொல்லும்**
**புது நாமத்தால்**
**நீ அழைக்கப்படுவாய்.**

**ஆபிராமை கவனித்துப் பாருங்கள்.**

முதலாவதாக **ஆதி.12:1** கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் **விட்டுப் புறப்பட்டு,** நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் **போ** என்றார்.

**ஆதி.12:4** கர்த்தர் ஆபிராமுக்குச் சொன்னபடியே அவன் புறப்பட்டுப் போனான்.

ஆபிராமுடைய பரிபூரண கீழ்படிதலைப் பாருங்கள். காணாததை விசுவாசித்து எல்லாவற்றையும் விட்டு, கீழ்ப்படிந்து புறப்பட்டு போகிறார்.

ஆபிராமுக்கு 99 வயதான போது கர்த்தர் தரிசமாகி, **ஆதி.17:5** இனி உன் பேர் **ஆபிராம்** என்னப் படாமல், நான் உன்னைத் திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாக ஏற்படுத் தினபடியால், உன் பேர் **ஆபிரகாம்** என்னப்படும். என்றார்.

தேவன் ஆபிராமுக்கு **புதிய நாமத்தைக் கொடுக்க காரணம் என்ன ?**

கர்த்தர் ஆபிராமுக்குச் சொன்னபடியே அவன் தன் தேசத்தையும், தன் இனத்தையும், தன் தகப்பனுடைய வீட்டையும் **விட்டு புறப்பட்டு**, தேவன் காண்பித்த தேசத்துக்கு **போனான்.**

என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே!

ஆபிராமைப் போல உங்களுக்கு ஒரு **மிஷனெரி தரிசனம்** தேவை.

இன்றைக்கு எத்தனையோ மிஷனெரி ஸ்தாபனங்கள் பரிபூரண கீழ்படிதலுள்ள ஊழியர்களுக்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றன. இன்றே உங்களை அர்ப்பணிப்பீர்களா ?

புதிய ஏற்பாட்டு காலத்திலே, இயேசுவின் தாயாகிய மரியாள் வேலைக்காரர்களைப் பார்த்து, யோவான் 2:5: **'இயேசு உங்களுக்கு என்ன சொல்கிறாரோ அதின்படி செய்யுங்கள்** 'என்றாள்.

வாக்குத்தத்தத்தை ஆவலோடு படிக்கும் கர்த்தருடைய பிள்ளையே!

இயேசு உங்களுக்கு என்ன சொல்கிறாரோ அதின்படி செய்யுங்கள். அப்பொழுது,

**கர்த்தருடைய வாய் சொல்லும்**
**புது நாமத்தால்**
**நீங்கள் அழைக்கப்படுவீர்கள்.**

ஆதி.28:18 அதிகாலையிலே யாக்கோபு எழுந்து, தன் தலையின்கீழ் வைத்தி ருந்த கல்லை எடுத்து, அதைத் துணாக நிறுத்தி, அதின் மேல் எண்ணெய் வார்த்து, அந்த ஸ்தலத்திற்கு **பெத்தேல்** என்று பேரிட்டான்.

ஆதி.28:22 நான் தூணாக நிறுத்தின இந்தக் கல் **தேவனுக்கு வீடாகும்;** தேவரீர் எனக்குத் தரும் **எல்லா வற்றிலும் உமக்குத் தசமபாகம் செலுத்துவேன்** என்று சொல்லிப் பொருத்தனை பண்ணிக்கொண்டான்.

ஆதி.35:9–10 யாக்கோபு பதான் அராமி லிருந்து வந்தபின்பு தேவன் அவனுக்கு மறுபடியும் தரிசனமாகி, அவனை ஆசீர்வதித்து: இப்பொழுது உன் பேர் **யாக்கோபு** என்னப்படாமல், **இஸ்ரவேல்** என்று உனக்குப் பேர் வழங்கும் என்று சொல்லி, அவனுக்கு **இஸ்ரவேல்** என்று பேரிட்டார்.

யாக்கோபை கவனித்துப் பாருங்கள்.

**1. இந்தக் கல் தேவனுக்கு வீடாகும்.**

**2. தேவன் தரும் எல்லாவற்றிலும் தசமபாகம்.**

கர்த்தருக்கு **ஜெபவீடு கட்ட வேண்டும் என்ற வாஞ்சை உங்களுக்கு இருக்கிறதா ?**

அதுமாத்திரமல்ல, தேவன் உங்களுக்கு கொடுக்கும் **எல்லா வற்றிலும் தசமபாகம் செலுத்த வேண்டும் என்ற பொருத்தனை உங்களிடத்தில் உள்ளதா ?** இப்படிப் பட்ட தரிசனமுள்ள உங்களைப் பார்த்து வேதம் கூறுகிறது:

**கர்த்தருடைய வாய் சொல்லும்**
**புது நாமத்தால்**
**நீ அழைக்கப்படுவாய்.** ஆமென்!

# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ.** 4 : 5

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் **'வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்'** இலவசமாக வழங்கி **இயேசுவை** அறிவித்தல்.

## தஞ்சாவூர் - திருவிடைமருதூர் யூனியன்
## 100 - கிராம ஊழியம்

**நோக்கம்:** 2009 **ஜுன்** 15 திங்கள் காலை 9 மணி முதல் **ஜுன்** 19 வெள்ளி இரவு 10 மணி முடிய **தஞ்சாவூர் - திருவிடைமருதூர் யூனியனில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம்** : 2009 **ஜுன்** 15 திங்கள் காலை 9 - 1

**கடைசி நாள் ஜெபம்** : 2009 **ஜுன்** 19 வெள்ளி இரவு 7 - 10 முடிய

( 2009 **ஜுன்** 15 - 19 **தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி** )

**உபவாச ஜெபம் நடைபெறும் இடம்**

**பெரேயா ஜெபவீடு,**
**ராஜா பில்டிங்,**
**தேங்காய் மண்டி எதிர்புறம்,**
**தரங்கம்பாடி ரோடு, ஆடுதுறை - 612 101.**
**கும்பகோணம் தாலுகா, தஞ்சாவூர் மாவட்டம்**

**நன்றி** : உதவி செய்ய முன் வந்த Pr. **சோலைதாஸ்** அவர்களுக்கு நன்றி!

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் 5 நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**பிரயாணப்படி** : தமிழ்நாட்டிலிருந்து ரூ. 5 செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**முக்கிய அறிவிப்பு** : 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.
**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**
2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**சகல தொடர்புகளுக்கும்** : சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், **100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 Cell : 94435 - 44628**

# திருச்சி - மணிகண்டம் யூனியன்
# 100-கிராம ஊழியம் அறிக்கை

**தேதி : 20.04.2009 முதல் 24.04.2009 முடிய**

**THANKS: The Light House Ministries.NECK - ELC**



கர்த்தருடைய கிருபையினால் திருச்சி – மணிகண்டம் யூனியனில் 20.04.2009 முதல் 24.04.2009 வரை **100–கிராம ஊழியம்** ஆசீர்வாதமாக நடைபெற்றது.

முதல் நாள், கடைசிநாள் கூடுமிடம், இனிப்பு இவைகளை பஞ்சப்பூர் F.M.P.B.சர்ச் போதகர் **ஜோசப் கலையரசன்** அவர்கள் பொறுப்பெடுத்துக் கொண்டு உதவி செய்தார்கள்.

தமிழ்நாட்டிலிருந்து 13 மாவட்டங்களைச் சேர்ந்த 49 கிராம ஊழியர்கள் வந்து ஊழியம் செய்தார்கள்.



முதல் நாள் ஜெபத்தில் ஊழியம் செய்ய வேண்டிய கிராமங்களின் பெயர்களை வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. TVGM காரியதரிசி **சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்** கிராம ஊழியர்களுக்கு ஆலோசனைகள் கூறி, உற்சாகப்படுத்தி ஜெபத்தில் நடத்தினார்கள்.

பின்பு கிராம ஊழியர்களை 11 குழுவாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவினரும் தாங்கள் ஊழியம் செய்யப் போகிற கிராமங்களுக்காக ஜெபித்தார்கள். மதிய உணவிற்கு பின்பு அவரவர் செல்ல வேண்டிய கிராமங்களுக்கு சென்றனர். இவர்கள் கிராமங்களில் கிடைக்கிற இடங்களில் தங்கிக் கொண்டு, வீட்டிற்கொரு லூக்கா சுவிசேஷம் மற்றும் கைப்பிரதிகள், சிலுவைக்கொடிகள் இலவசமாக கொடுத்து ஊழியம் செய்தார்கள்.



கடைசி நாள் ஜெபத்தில் சிறப்பு விருந்தினராக வந்திருந்த **பாஸ்டர் விக்கி, சகோ.வாரன் ஹூக்** தேவசெய்தியளித்து ஊழியர்களை உற்சாகப்படுத்தினார்கள். கிராம ஊழியர்கள் சாட்சிக் கூறிய பின்பு, பிரயாணப் படி, இனிப்பு மற்றும் சிறப்பு விருந்தும் அளிக்கப்பட்டது.



இதன்பின் கிராம ஊழியர்கள் TVGM தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற கருத்தரங்கிலும், TVGM **30**வது ஆண்டு நிறைவு விழா ஸ்தோத்திரக் கூட்டத்திலும் பங்குபெற்று சந்தோஷத்துடன் திரும்பிச் சென்றார்கள். இந்த ஊழியத்தின் போது கிராமங்களில் 5714 லூக்கா சுவிசேஷப் புத்தகங்கள், 13,000 கைப்பிரதிகள், 7500 சிலுவைக்கொடிகள் வழங்கப்பட்டது. 105 புறமத நண்பர்கள் தங்கள் விலாசங்களை கொடுத்து, வேதபாடங்கள் தபால் மூலம் அனுப்ப கேட்டுக் கொண்டார்கள்.

## கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

**குழு:1 சகோதரி மணியம்மாள், மேரி செல்லாபாய், சலோமி சம்மனசு, கிருபா பழனியம்மாள்.**

நாங்கள் வீடுகள் தோறும் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து, சத்தியத்தை அறிவித்தபோது மக்கள் வாஞ்சையோடு புத்தகத்தை கேட்டார்கள். சிலர் இதை எதற்காக கொடுக்கிறீர்கள் என்று கேட்டார்கள். அவர்களுக்கு இது கடவுளின் வெளிச்சம் என்று தெளிவாக விளக்கிச் சொன்னபோது சந்தோஷமாக வாங்கிக் கொண்டார்கள். இன்னும் 3 கி.மீ தூரம் நடந்து சென்று **மேக்குடி** என்ற கிராமத்தில் சுவிசேஷம் அறிவித்து, திரும்பி வரும்போது ஒரு மனிதன் நாங்கள் கிராமங்களில் புத்தகங்கள் கொடுத்து வந்த வீடுகளில் **13** புத்தகங்களை வாங்கி வந்து எங்களிடம் கொடுத்து, இனி இங்கு கொடுத்தால் அவ்வளவுதான் என்று சொல்லி எங்களை கிராமத்தை விட்டு துரத்தினான். 515 லூக்கா சுவிசேஷம், 680 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:2 சகோதரி கஸ்தூாி, மேரி மீனா, மரியாள், ரூத்பகவதி, அன்னாள்.**

எசனப்பட்டி, பூங்குடி, வடக்கிமேடு, அருவாக்குடி, மட்டப்பாறைப்பட்டி ஆகிய கிராமங்களில் லூக்கா சுவிசேஷம் கொடுத்து, நற்செய்தியை அறிவித்தோம். மக்கள் ஆர்வமுடன் கேட்டனர். ஒரு மனிதன் எங்களிடம் எல்லா கடவுளும் ஒன்று தான் என்றாலும் **இயேசு நல்ல தெய்வம்** என்றார். 550 லூக்கா சுவிசேஷம், 750 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு:3 பாஸ்டர் ஆல்வின், சகோ.ஜெபமலைநாதன், பீட்டர் ராமலிங்கம், தாவீது தங்கவேல்.**

மணிகண்டம், பஞ்சப்பூர், விநாயகபுரம் கிராமங்களில் புத்தகம் கொடுத்தபோது, மக்கள் ஆர்வமுடன் சத்தியத்தைக் கேட்டனர். இங்கு எந்த வித எதிர்ப்பும் இல்லை. 500 லூக்கா சுவிசேஷம், 600 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு:4 சகோ.மாற்கு மாரியப்பன், செல்வராயர் பால், மகாராஜன், நோவா, பவுல் அருணாசலம்.**

நாங்கள் கிராமங்களில் வீடுகள் தோறும் சுவிசேஷப் புத்தகம் கொடுத்த போது எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் மக்கள் சந்தோஷத்துடன் சத்தியத்தைக் கேட்டு, புத்தகங்களை வாங்கிக் கொண்டார்கள். 389 லூக்கா சுவிசேஷம், 750 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு:5 சகோதரி எஸ்தர் கனகாம்புஜம், கிளமெண்ட்ஸ்மேரி, ஜெபமணி, தெபோராள்.**

சூறாவளிப்பட்டி, மாத்தூர், சன்னாசிப்பட்டி கிராமங்களில் வாஞ்சையோடு புத்தகங்களை வாங்கிக் கொண்டார்கள். இந்த கிராமங்களில் எல்லோரும் விவசாயிகள். நல்ல மழை வேண்டும் என ஜெபிக்கச் சொன்னார்கள். மழைக்காக ஜெபித்தோம். கடுமையான வெயிலிலும் நடந்து சென்று ஊழியம் செய்தோம். 500 லூக்கா சுவிசேஷம், 600 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு:6 சகோதரி டோரா லாசர், அமிர்தம், அந்தோணி மேரி, ஷீலா.**

நாங்கள் சென்ற கிராமங்களில் இளம் வயதினர் அன்போடு பயபக்தியோடு புத்தகங்களை வாங்கினார்கள். நாங்கள் அன்போடு பேசி சுவிசேஷத்தைக் கூறி வந்தோம். எங்களுக்கு தங்குவதற்கு இடம் கிடைக்காத நேரத்தில் ஆண்டவரே எங்களுக்கு உதவி செய்தார். ஒரு சிறுமியின் உதவியால் எங்களுக்கு தங்குவதற்கு இடம் கிடைத்தது. 500 லூக்கா சுவிசேஷம், 645 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:7 சகோதரி கிரேஸ் பத்மா, அன்னக்கிளி, ஜெபமேரி, ஐஸ்வர்யா, மனோரஞ்சிதம்.**

கிராமங்களில் வீடுகள் தோறும் புத்தகங்கள் கொடுத்து, சுவிசேஷம் சொல்ல கர்த்தர் கிருபை செய்தார். அநேக மக்களுக்காக ஜெபித்தோம். நாங்கள் தங்கியிருந்த இடத்தில் சாயங்கால நேரத்தில் சிறுபிள்ளை களுக்கு பாட்டு, கதை, வசனம் சொல்லி அவர்களுக்கு இயேசுவின் அன்பை விளக்கினோம். 525 லூக்கா சுவிசேஷம், 670 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு:8 சகோதரி மரியம்மாள்,செலின், அபியேல், சாந்தி.**

**செங்குளம்** கிராமத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் 24 குடும்பமாக வசிக்கிறார்கள். இவர்க ளுக்கு சுவிசேஷம் சொன்னபோது, ஆர்வமாக கேட்டார்கள். சுவிசேஷப் புத்தகங்களையும் சந்தோஷமாக பெற்றுக் கொண்டார்கள். **செவந்தியான்பட்டி** கிராமத்தில் உள்ளவர்கள் எங்களை சுவிசேஷம் சொல்லக்கூடாது, புத்தகம் எதுவும் கொடுக்கக்கூடாது என்று விரட்டி னார்கள். **அளுந்துார்** கிராமத்திலும் சுவிசேஷப் புத்தகம் வாங்க மறுத்தனர். பலருக்காக ஜெபித்தோம். 400 லூக்கா சுவிசேஷம், 650 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு:9 சகோ.சூசைமாணிக்கம், பெஞ்சமின், ஸ்டான்லி, இம்மானுவேல், அந்தோணி.**

கோடங்கிப்பட்டி, குன்னத்துார், சரளப் பட்டி, பாத்திமாநகர் கிராமங்களில் அநேகர் ஆர்வமாய் கேட்டு சுவிசேஷப் புத்தகத்தை வாங்கினர். சில கத்தோலிக்க கிறிஸ்த வர்கள் சிலை வழிபாடு செய்வது சரி என்று வாதிட்டார்கள். நாங்கள் அவர்களுக்கு தேவனுடைய வார்த்தையை சொன்னாலும் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. 500 லூக்கா சுவிசேஷம், 650 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:10 சகோதரி எஸ்தர், லீதியாள், தேவகிருபை,பிச்சையம்மாள், லூாயிஸ் அம்மாள்.**

நாங்கள் 7 கிராமங்களில் சுவிசேஷப் புத்தகங்கள் கொடுத்தோம். யாவரும் எங்களை அன்போடு ஏற்று, நற்செய்தியை கேட்டார்கள். சிலருக்கு ஜெபித்தோம். 835 லூக்கா சுவிசேஷம், 620 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:11 சகோ.இஸ்ரவேல், இஸ்தாக்கி, ஸ்டீபன்ராஜ், யோசுவா.**

நாங்கள் வீடுகள் தோறும் சுவிசேஷப் புத்தகங்கள் கொடுத்து, நற்செய்தியை அறிவித்தோம். யாவரும் வாஞ்சையோடு வாங்கினார்கள். எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் விடுதலையோடு ஊழியம் செய்தோம். 500 லூக்கா சுவிசேஷம், 885 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை உண்டாவதாக!**

## TVGM தலைமை அலுவலகத்திற்கு வந்த சாட்சி கடிதங்களில் சில

1. **சகோ.மாது, நாமக்கல்.**

'100–கிராம ஊழியம்' பத்திரிக்கையை படித்தேன். அதிலுள்ள ஒவ்வொரு வார்த்தையும் உடைந்து போன என் உள்ளத்திற்கு ஆறுதலாக இருந்தது. **இயேசுவே மெய்யான தெய்வம்** என்று தெரிந்து கொண்டேன்.

2. **சகோதரி நிர்மலா, பெங்களூர்.**

ரூ.60,000/– மதிப்புடைய நகை பெட்டியோடு காணாமல் போய் விட்டது. TVGM-க்கு போன் செய்து ஜெபிக்கக் கேட்டேன். மறுநாள் **'100–கிராம ஊழியம்'** பத்திரிக்கை என் கையில் கிடைத்தது. அதில் **'சகலத்தையும் திருப்பிக் கொள்வாய்'** என்ற வாக்குத்தத்தம் இருந்தது. அந்த வார்த்தையை வைத்து ஜெபித்தேன். மறுநாளே நகை கிடைத்தது.

3. **சகோதரி எலிசபெத், கோவை.**

எனக்கு மூட்டு பகுதியில் ஏற்பட்ட விபத்தில் ஆப்பரேஷன் செய்தோம். அப்பொழுது ஜெபிக்கும்படி தங்களுக்கு கடிதம் எழுதினோம். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு கால் ஊன்றி நடக்க செய்தார்.

**அன்பானவர்களே!**
இவர்களுக்கு அற்புதம் செய்த இயேசுகிறிஸ்து உங்களுக்கும் கட்டாயம் அற்புதம் செய்வார். உங்கள் காரியங்கள் எதுவானாலும் தயங்காமல் எங்களுக்கு எழுதுங்கள். ஜெபிக்கிறோம். கர்த்தர் பதில் கொடுப்பார். கடிதத்தில் உங்கள் முழுமுகவரியை பின்கோடுடன் தெளிவாக எழுதுங்கள்.

## TVGM 12 மணி நேர துதி ஆராதனை & வாக்குத்தத்த தேவசெய்தி

ஏசா. 62:2

**கர்த்தருடைய வாய் சொல்லும் புது நாமத்தால் நீ அழைக்கப்படுவாய்.**

### துதி ஆராதனை

**நாள் :** 01.06.2009 திங்கட்கிழமை

**துதி ஆராதனை நேரம் :** 7AM-7PM

**வாக்குத்தத்த செய்தி :** 7PM-8PM

### நடு இரவு ஜெபம்

**நாள் :** 30.06.2009

**நேரம் :** 7PM-12Mid Night

**கர்த்தருடைய பந்தி : 12மணி**

### இடம்

TVGM தலைமை அலுவலகம் ( வீரங்கி நல்லூர் ரோடு )
100 – கிராமம், சோமரசம் பேட்டை(ஆஸ்பத்திரி ஸ்டாப்)
திருச்சி – 620 102.Ph : 0 - 431 - 2607241 Cell : 94435 - 44628

**முக்கியக் குறிப்பு :** ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் காலை 9 முதல் 12மணி வரை உபவாச ஜெபமும் நடைபெறும்.

## THANKS: ELIM CHRISTIAN CENTRE





கன்னியாகுமரி மாவட்டத்தில் அறிமுகப்பணி அலுவலகம் அமைக்க, நிலம் வாங்க 29.04.2009 அன்று விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.



கோடாவிளை முதியோர் இல்லத்தை பார்வையிட்டு ஜெபித்தார்கள்.



கோடாவிளையில் கட்ட வேண்டிய இடத்தை பார்வையிட்டார்கள்.



குண்டல் சிறுவர் இல்லம்



திரு.இரத்தினம் மேனேஜருக்காக ஜெபம்



லேனாவிளக்கு இலங்கை அகதி முகாமில் சபை மக்களும், ஏலீம் சபையாரும் இணைந்து கட்டியுள்ள ஜெபவீட்டை பார்வையிட்டு ஜெபித்தார்கள்.

**தேவனுக்கே மகிமை!**

 

கிராமங்களில் கட்டப்பட்டு வரும் ஜெபவீடுகளை பார்வையிடல்

 

TVGM நிர்வாக அலுவலக கட்டித்தை பிரதிஷ்டை செய்தார்கள்.
பின்பு முதல் மாடி கட்டிடம் கட்டப்பட ஜெபித்தார்கள்.

 

தோப்புக்கொல்லை இலங்கை அகதிகள் முகாமிலுள்ள அனைத்து விதவைகளுக்கும் ஏலிம் சபை சார்பில் சேலை வழங்கினார்கள்.



இம்மானுவேல் கிறிஸ்தவ ஐக்கியம் – Newbury Park -சபை உறுப்பினர்களால் தோப்புக்கொல்லை இலங்கை அகதிகள் முகாமில் கட்டப்பட்ட வீட்டை **பாஸ்டர் விக்கி, சகோ. வாரன்** ஆகியோர் ஜெபத்துடன் திறந்து வைத்தார்கள்.

# TVGM அறிமுகப்பணி அலுவலகம்
# 2009 ஏப்ரல் மாத ஊழிய அறிக்கை

அறிமுகப்பணி அலுவலக ஊழியர்கள்



கர்த்தருடைய பெரிதான கிருபையினால் ஏப்ரல் மாத ஊழியங்கள் ஆசீர்வாதமாக நடைபெற்றது. கடந்த மாதம் குறிப்பிட்டிருந்தபடி ஆதலவிளை, சங்கரன்புதுார், கண்ணன்பதி, தேவகுளம், கோட்டவிளை ஆகிய கிராமங்களில் லூக்கா சுவிஷேப் புத்தகங்கள் வீடுகள்தோறும் இலவசமாக கொடுத்து, இயேசுவை அறிவித்து வாஞ்சையுள்ளவர்களின் விலாசங்களைச் சேகரித்தோம். ஆதலவிளையிலும், கோட்டவிளையிலும் அதிகமான எதிர்ப்பு இருந்தாலும், நாங்கள் கொண்டு சென்ற எல்லா சுவிசேஷப் புத்தகங்களையும் விநியோகித்து முடிக்கும் வரை தேவன் காத்துக் கொண்டார். இன்னும் மாங்குளம், பத்மநாயன்புதுார், குறண்டி ஆகிய கிராமங்களை சந்திக்க தேவன் வழியை திறக்கும்படி ஜெபிக்கிறோம்.

ஏப்ரல் 4ம் தேதி பிலிப்ஸ்புரம் சி.எஸ்.ஐ.சபையில் **'100–கிராம ஊழிய தரிசன முகாம்'** நடத்த கர்த்தர் கிருபை செய்தார். முழு ஒத்துழைப்புக் கொடுத்த சபை குருவானவர் மற்றும் அவரது துணைவியாரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. சபை செயலர் மற்றும் கமிட்டினருக்கு நன்றி கூறுகிறோம். TVGM ஊழியத்தை நேசிக்கும் தேவபிள்ளைகள் யாவரும் முகாமை சிறப்பித்தார்கள். கர்த்தர் தேவைகளை அற்புதமாக சந்தித்தார்.

ஏப்ரல் 22ம் தேதி நம் அலுவலக சகோதரிகள் 9 பேரும், பிள்ளைகளும் TVGM தலைமை அலுவலகம், திருச்சியில் நடைபெற்ற 30வது ஆண்டு நிறைவு ஸ்தோத்திரக்கூட்டத்தில் பங்குபெற்று, 27ம் தேதி திரும்பினோம்.

ஏப்ரல் 29ம் தேதி நாகர்கோவிலில் TVGM ன் **30வது ஆண்டு நிறைவு விழாவை** நினைவுகூரும்படி ஒரு ஸ்தோத்திரக் கூட்டம் ஒழுங்கு செய்து தேவனுக்கு நன்றி செலுத்தினோம்.

முன்பு 5 வருடங்களாக எமது அலுவலகத்தில் ஊழியம் செய்த அனுபவமுள்ள ஒரு சகோதரி மீண்டும் ஊழியத்தில் வந்து இணைய கர்த்தர் கிருபை செய்தார்.

நாகர்கோவில் அறிமுகப்பணி அலுவலகத்திற்கு ஒரு சொந்த இடம் வாங்கும் முயற்சிகளை ஏப்ரல் மாதத்தில் செய்யவும், ஒரு இடத்தை Book பண்ணவும் கர்த்தர் கிருபை செய்தார். தேவசித்தம் அதில் பரிபூரணமாக வெளிப்பட ஜெபித்து செயல்பட்டு வருகிறோம். **தேவனுக்கே மகிமை!**


கிறிஸ்துவின் பணியில்,
**ஷோபனா இவாஞ்சலின்,**

**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001.

**செல் : 98658 26424 போன் : 04652- 277251.**

# TVGM தரிசனமுகாம் ( 04.04.2009 )
## ( சி.எஸ்.ஐ.- பிலிப்ஸ்புரம், நாகர்கோவில் )


சி.எஸ்.ஐ. போதகர் – வாழ்த்துரை


ஸ்டீபன் கிறிஸ்டோபர் – காரியதரிசி


TVGM ஸ்தாபகர் – கிறிஸ்டோபர்


TVGM ஸ்தாபகர் – ஜெயசீலி


ஒருங்கிணைப்பாளர் – ஷோபனா


அறிமுகப்பணி சேவையாளர்கள்


கூட்டத்தின் ஒரு பகுதி


மதிய உணவு

# TVGM –**30வது ஆண்டு நிறைவு ஸ்தோத்திரக் கூட்டம் - (24.04.09)**

கர்த்தருடைய கிருபையினால் 30வது ஆண்டு நிறைவு ஸ்தோத்திரக் கூட்டம் 24.04.2009 அன்று ஆசீர்வாதமாக நடைபெற்றது. இந்த ஸ்தோத்திரக் கூட்டத்தை முன்னிட்டு 100–கிராம ஊழிய தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் அலுவலக ஊழியர்களுக்கு 'வேதாகமத்தின் அடிப்படையில் சமுதாய கரிசனை' என்ற கருத்தரங்கு ஒன்று சகோ. எட்வின் (ICRM – ஒரிஸா) அவர்கள் மூலம் நடத்தப்பட்டது.

**பாஸ்டர் விக்கி** மற்றும் **சகோ. வாரன்** விசேஷித்த தேவசெய்தி அளித்தார்கள். **பாஸ்டர் ஜோசப்**(JMHA)அவர்கள் சகோ.P.T.கிறிஸ்டோபர், சகோதரி ஜெயசீலி, சகோ.ஸ்டீபன் ஆகியோருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்து, சிறப்பு ஜெபம் ஏறெடுத்தார்கள்.



பொன்னாடை Pr.விக்கி,சகோ. வாரன்




சகோ.கிறிஸ்டோபர் குடும்பத்திற்காக விசேஷித்த ஜெபம்



தேவசெய்தி – பாஸ்டர் விக்கி



தேவசெய்தி – சகோ. வாரன்



சகோ. எட்வின் (ICRM – ஒரிஸா)



கலந்துகொண்ட தேவ பிள்ளைகள்

**<u>தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.</u>**

**"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது". யாக். 5:16**

# தினசரி ஜெபக்குறிப்புகள்

***திங்கள்:*** 30 ஆண்டுகள் TVGMஐ நடத்தின தேவாதி தேவனுக்கு தொடர்ந்து ஸ்தோத்திரம் செலுத்துவோம்.

***செவ்வாய்:*** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர் TVGM-தலைமை பொறுப்பேற்று 5 ஆண்டுகளை முடித்து 6வது வருடத்தை வெற்றியோடு துவங்க செய்த தேவன் முடிக்கும்படியாக ஸ்தோத்திரபலிகள் ஏறெடுப்போம்.

***புதன்:*** ஜுன் மாதத்தில் 12ம் தேதிக்குள் 8 ஜெபவீடுகள் பிரதிஷ்டை செய்ய தீர்மானித்துள்ளோம். கர்த்தர் முற்றும் முடிய நடத்த ஜெபியுங்கள்.

***வியாழன்:*** நாகர்கோவில் அறிமுகப் பணி அலுவலகத்திற்கு நிரந்தர கட்டடம் கட்டப்படுவதற்கு ஒரு நிலத்தை கர்த்தர் கொடுக்கும்படி ஜெபியுங்கள். கடந்த மாதத்தில் புக் பண்ணியிருந்த நிலம் கைக்கூடி வரவில்லை. ஆதலால் புதிய இடத்தை தேவன் காட்டும்படி ஜெபியுங்கள். மேலும் அறிமுகப் பணி சகோதரிகளுக்கு சந்தித்து ஜெபிக்க வேண்டிய வீடுகள் அதிகப்பட்டுக் கொண்டிருப்பதால் கட்டாயமாக ஒரு **ஆம்னி வேன்** தேவைப்படுகிறது. ஜெபியுங்கள்.

***வெள்ளி:*** TVGM தலைமை அலுவலகத்தில் சிறுவர் இல்லம் கட்டுவதற்கு ஆரம்பித்துள்ளோம். இதன் தேவை மிகப் பெரிதாக உள்ளது. கர்த்தர் தாமே இதுவரையிலும் செய்த நன்மைக்காக தேவனைத் துதியுங்கள்.

***சனி:*** **'கிறிஸ்தவ தலைமைத்துவ மையம்'** சம்பந்தமாக டிரஸ்ட் ஒன்று புதிதாக தயார் செய்யப்பட்டு புதிய கமிட்டி அமைக்கப்பட்டு அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட ஜெபியுங்கள்.

மேலும் 10 ஏக்கர் நிலம் கிராமத்தில் வாங்கப்பட உத்தேசமாக 15 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. இம்மாபெரும் தேவைக்காக ஜெபியுங்கள்.

***ஞாயிறு*** : TVGM ஊழியங்களுக்காக உண்மையாக ஜெபித்து, நேசித்து காணிக்கை அனுப்பி வரும் ஒவ்வொருவருக்காக ஜெபியுங்கள்.

TVGM டிரஸ்டுக்கு FCRA. மற்றும் சோஷியல் சர்வீஸ் டிரஸ்டுக்கு 80G ஆர்டர், சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு சலுகை விலையில் அரிசி வாங்குவதற்கு கோட்டா கார்டு கிடைக்க ஜெபியுங்கள்.

## முக்கிய ஜெபக்குறிப்பு

**TVGM தலைமை அலுவலகத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.**

1. அம்பாசிடர் கார் டவுணில் ஓட்டி அனுபமுள்ள, லைசன்ஸ் உள்ளவர்.
2. அக்கவுண்ட் எழுதி அனுபமுள்ள, Tally படித்தவர்கள்.
3. தமிழ் / ஆங்கிலம் டைப்பிஸ்ட்
4. சிறுவர் இல்ல வார்டன்
5. சமையல் 6. கிராம ஊழியர்கள்
7. கட்டிட பணிகளை கவனிக்க அனுபவமுள்ளவர்கள்.

## TVGM சிறுவர் இல்லம் பிள்ளைகளின் படிப்பு

ஜூன் மாதம் வந்தாலே எல்லா பெற்றோர்களுக்கும் ஒரு டென்சனான நேரம். பிள்ளைகளை புதிய பள்ளிக்கூடத்தில் சேர்ப்பதும், பிள்ளைகளுக்கு யூனிபார்ம், நோட்டுப்புத்தகம் வாங்கிக் கொடுப்பது, பீஸ் கட்டுவது போன்ற காரியங்கள் ஆகும்.

இந்த வரிசையில் TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகளை நினைக்கும்பொழுது எங்களுக்கும் ஒரு பெரிய பொருளாதார போராட்ட நேரம் ஆகும். உத்தேசமாக 70 பிள்ளைகளுக்கு நாங்கள் சகலமும் வழங்க வேண்டியுள்ளது. ஒரு பிள்ளைக்கு சராசரியாக குறைந்த பட்சம் ரூ.1000/- என்று வைத்தால் கூட ரூ.70000/- தேவைப்படும். ஆனால் ஒவ்வொரு வருடமும் கர்த்தர் கிருபையாக தமக்குச் சித்தமான பிள்ளைகளைக் கொண்டு எவ்வித குறைவுமின்றி நடத்தி வருகிறார்.

இதுவரையிலும் நடத்தின தேவன் நிச்சயமாக 2009 ஜூன் மாதமும் நடத்துவார் என முழு நிச்சயமாய் நம்புகிறோம். உங்கள் ஜெபத்தில் சிறுவர் இல்லப் பிள்ளைகளையும் நினைத்துக் கொள்ளுங்கள். **தேவனுக்கே மகிமை!**

**நன்றி :** 2009 ஏப்ரல் மாதத்தில் சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு சிறப்பு விருந்தளித்த திருச்சியை சார்ந்த சகோ.நாகமுத்து, சகோ.நடராஜ், சகோ. கமலாகரன், சகோ.விஜய், சகோதரி உமா விஜய் மற்றும் சகோ.ராபின்சன் (நாசரேத்), சகோதரி மாலினி (சென்னை), சகோதரி ரோசாலி (திண்டுக்கல்) அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

## கர்த்தரால் ஏவப்படுபவர்கள் TVGM ஊழியங்களுக்கு டிராப்ட் , செக் எடுத்து அனுப்ப வேண்டிய முறை

**TAMIL VILLAGE GOSPEL MISSION (100-** கிராம ஊழியம், ஜெபவீடு)
**T.V.G.M. SOCIAL SERVICE** (சிறுவர் இல்லம், ஏழைகளுக்கு உதவி)
**T.V.G.M. PUBLICATION** ( பத்திரிக்கை சந்தா, அச்சகம் அமைக்க)

ஸ்தாபனத்தின் பெயரில் டிராப்ட் எடுக்க முடியாவிட்டால் தயவுசெய்து
**MR. STEPHEN CHRISTOPHER, SB 12491010 18538 CANARA BANK,**
**Code : 1249 Puthur Branch, TRICHY, PIN - 620 017, Tamil Nadu.**
**என்ற பெயரில் டிராப்ட் எடுத்து, கடைசி பக்கமுள்ள TVGM தலைமை அலுவலக முகவரிக்கு நோக்கத்தையும் உங்கள் முழு முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை குறிப்பிட்டு அனுப்பி உதவுங்கள்.**
**எங்கள் Email: 100village@tvgm.org- மூலம்**
**நீங்கள் காணிக்கை அனுப்பியுள்ள விபரத்தை தெரியப்படுத்துங்கள்.**

Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

**Return Request**
TVGM Publication Trust
4/274, Hundred Village,
Somarasampettai,
Trichy - 620 102. India.

POSTAL REGISTRATION NUMBER :TRY / 013 / 2009 - 2011
**Posting Date 25th at H.P.O. Trichy.**

**ஏலீம் தமிழ் கிறிஸ்தவ சபை போதகர் விக்கி** அவர்கள் சபையின் விசுவாசி **திரு.பேட்ரிக்** குடும்பம் கொடுத்தனுப்பிய காணிக்கைகளை கொண்டு TVGM சிறுவர் இல்லத்தில் சிறப்பு விருந்தளித்து, புதுக்கோட்டை அரசாங்க **தொழுநோயாளர்களுக்கு** பிளேட், பிஸ்கட் கொடுத்து ஏழை சிறுவர்களையும், தொழுநோயாளர்களையும் மகிழ்ச்சிக்குள்ளாக்கினார்கள்.

**சகோ.வாரன்** அவர்கள் தேவசெய்தி அளித்து தேவனை மகிமைப்படுத்தினார்கள்.





**TVGM தலைமை அலுவலக முகவரி**
**ஜெப உதவி,காணிக்கை மற்றும் சகல தொடர்புகளுக்கும்:-**
MR.STEPHEN CHRISTOPHER,
CHIEF EXECUTIVE OFFICER
**TAMIL VILLAGE GOSPEL MISSION**
100- VILLAGE ( Veeranginallur Road )
SOMARASAMPETTAI,(Hospital Stop)
TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.

STD Ph : 0-431 - 2607241
FAX : 0-431- 2607446
Email :
100village@tvgm.org

*Website :*
www.tvgm.org
தினசரி வாக்குத்தத்தம், செய்தி
100 கிராம ஊழிய அறிக்கை
வெளியிடப்பட்டு வருகிறது.

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011
HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
ഹണ്ട്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി _ हन्ड्रेड विलेज मिनिस्ट्री